பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 12 ஞாயிற்றுக்கிழமை 28.07.2024 கதிர் 263

# தேர்தலில் ரணில் போட்டி நேற்று அவரே அறிவிப்பு

## 10 வருடங்களில் நாட்டைச் சிங்கப்பூராக்குவேன் என்றும் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடவுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதற்காக கட்டுப்பணம் கட்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

காலி நகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற ‘ஒன்றாக வெல்வோம் - காலியில் நாம்’ கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2022 ஆம் ஆண்டில் பிரதமர்



பதவியை ஏற்க எவரும் இல்லாத நிலையிலேயேஎனக்குவழங்கப்பட்டது. தெற்காசியாவில் முதல் முறையாக பிரதமர் பதவி யாசகம் செய்தது. நீங்கள்அடைந்ததுயரங்களைக் ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

ஒரு வழியாக இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக ரணில் விக்கிரமசிங்க நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார். தேர்தலுக்கு ரணில் வருவாரா மாட்டாரா என்று எல்லோரையும் குழம்ப வைத்தவர் கடைசியில்அதற்கொருமுற்றுப்புள்ளி வைத்திருக்கிறார். குட்டையைக் குழப்போ குழப்பென்று குழப்பிய பின்னர் அதற்குள் மீன்பிடிக்க இப்போது அவர் குதித்திருக்கிறார். நேற்று வரைக்கும் அவர் ஒரு வெற்றி வாய்ப்புள்ள போட்டியாளர் என்று எந்தக் கருத்துக் கணிப்பும் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல மற்றைய இரு வேட்பாளர்களான சஜித்துக்கும் அனுரவுக்கும் கடுமையான சவாலைக் கொடுக்கக் கூடியவராகக்கூட அவர் இன்னமும் வளரவில்லை. இருந்தபோதும் அவர் தேர்தல் குதித்துள்ளார். இது எந்தக் குருட்டு நம்பிக்கையில் நிகழ்கிறது என்பது அவருக்கே வெளிச்சம். இல்லாவிட்டால் அதற்குமொரு நரித் தந்திரத்தை அவர் வைத்திருக்கக்கூடும்.

நரித் தந்திரங்களில் மட்டுமல்ல நேரடியானதந்திரங்கள்மூலமும்அவர் தனக்கான ஆதரவைத் திரட்டுவதில் மும்முரமாக இருக்கிறார். அதன் முதற்படியாக அவருக்குத் தேர்தலில் ஆதரவளிக்க வேண்டும் ☞ 2

## மைத்திரியின் முழு ஆதரவு விஜயதாச ராஜபக்சவுக்கே

அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் தனது ஆதரவு விஜயதாச ராஜபக்சவுக்கே என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டரீதியானநிறைவேற்றுசபையின் ஊடாகவேவிஜேதாசராஜபக்சஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். நிறைவேற்று சபையின் அங்கீகாரத்துடனேயே அவர் ஜனாதிபதி வேட்பாளராகவும் அறிவிக்கப்பட்டார். அதற்கு எவரும் எதிர்ப்பினை வெளிப்படுத்தவுமில்லை.

இன்னும் சிலர், அவர் ☞ 2

## வாக்களிப்பு நிலையத்தை மாற்றிக்கொள்ள முடியும்

### விண்ணப்பிக்கச் சொல்கிறது ஆணைக்குழு

தத்தமது வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் அவற்றை மாற்றிக் கொள்ள முடியும் என்று தேர்தல்கள்ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆணைக்குழு ☞ 8

## அதாவுல்லா, அஸாச் சாலி ரணிலுக்கு தேர்தலில் ஆதரவு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் வகையில் அநுராதபுரம் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதா ☞ 8

## ரணில் மீண்டும் ஜனாதிபதியாவதே தமிழர்களுக்கான சரியான தெரிவு

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்

மீண்டும்ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவே தெரிவுசெய்யப்படவேண்டும் என்றுதாம் விரும்புகின்றார் எனவும் அதுவே தற்கால சூழலுக்கும் தமிழ் மக்களுக்கும் சரியான தெரிவாக இருக்கும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள கட்சியின்தலைமைஅலுவலகத்தில் இடம்பெற்ற மாவட்ட மற்றும் பிரதேச பொறுப்பாளர்கள் முக்கியஸ்தர்களுடனானசந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான கால அட்டவணையைத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதேநேரம் குறித்த திகதியில் தேர்தல் நடைபெற்றாலும்சரிஇல்லாது விட்டாலும் சரி தேர்தலை எதிர்கொள்வதற்கான அனைத்துச் செயற்பாடுகளிலும் நாம் தயாராகவே இருக்கவேண்டும்.

தற்போதைய தேர்தல் களத்தில் ☞ 8

## தமிழ் பொது வேட்பாளர் தமிழர்களை பின்னடையச் செய்வதற்கான முயற்சி

### நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குற்றச்சாட்டு

தமிழ் பொது வேட்பாளர்என்பதுதமிழர்களைப் பின்னடையச் செய்வதற்கான முயற்சி என்றுஇலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்தெரிவித்தார்.

வவுனியாவில்நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

தற்போது மாகாண சபையை வினைத் திறனுடன்நடத்தமுடியாதவர் களுக்கு எதற்கு சமஷ்டி என்றொரு கேள்வி எம்மை நோக்கி எழுப்பப்படுகின்றபோது தலைகுனிந்து நிற்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அரசமைப்பு உருவாக்கச் செயற்பாட்டின்போது மாகாண சபை முதலமைச்சர்கள் வழிநடத்தல் குழுவிற்கு அழைக்கப்பட ☞ 8

## தேர்தல் பணிகளுக்கென தனியாக 2 பொலிஸ் அதிகாரிகள் நியமனம்

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக, தேர்தல் விவகாரங்களுக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் அசராங்கவின்கடமைக்கு மேலதிகமாக ஒரு பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும்சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதி பொலிஸ் மா அதிபர் பீ.லியனகே மற்றும்சிரேஷ்டபொலிஸ் அதிகாரி கே.டீ.ஜீ.எல்.ஏ. தர்மசேன ☞ 8

## பொலிஸ் மா அதிபர் விவகாரம் தேர்தலுக்குத் தடையாகாது

### ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் கருத்து

பொலிஸ் மா அதிபர் ஒருவர் கடமையில் இல்லாத விவகாரம் தேர்தலுக்குத் தடையாகாது என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். ☞ 2

## உயர் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்கமுடியாதென நாடாளுமன்றுக்கு வெளியே கூறமுடியுமா?

### ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எதிர்க் கட்சித் தலைவர் சவால்

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்கமுடியாது என்றுமுடிந்தால்நாடாளுமன்றத்திற்கு வெளியே வந்து கூறித்தான் பாருங்களேன் என்று ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சவால் விடுத்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவர்சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

காஹவத்தவில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுமக்கள் கூட்டம்நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## மக்களின் கைகளுக்கு அதிகாரம் மாறவுள்ளது

### இப்படிச் சொல்கிறார் அநுரகுமார

இதுவரை வலது கைக்கும் இடது கைக்குமாக மாறி வந்த அதிகாரங்கள் இப்போது மக்களின் கைக்கு மாறவுள்ளது. அதற்குத் தலைமை தாங்கப் போகும்நாம்அமைதியாக அதற்குஉழைப்போம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார ☞ 2

## உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆளும் தரப்பு ஏற்கவேண்டும்

### பாட்டலி சம்பிக்க வலியுறுத்து

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று ஆளும் தரப்புச் செயற்பட வேண்டும்என்றுஎன்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ☞ 8

## சட்டத்தை மதித்து அதற்கமைய ஜனாதிபதி செயற்படவேண்டும்

### முன்னாள் இராணுவ தளபதி தெரிவிப்பு

ஜனாதிபதியும் ஆளும் தரப்பினரும் சட்டத்தை மதித்துச் செயற்படவேண்டும் என்று முன்னாள் இராணுவத்தளபதி ☞ 8

## இனி இது .....

என்று கேட்டு அவரது ஒரேயொரு தானைத் தளபதியான சாகர ரத்நாயக்கவையும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் அனுப்பி வைத்திருக்கிறார். அவர்கள் இருவரும் சென்று ஜனாதிபதித் தேர்தலில் ரணிலையே ராஜபக்சக்களும் மொட்டுக் கட்சியும் ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

மகிந்தவும் இதுபோன்ற விடயங்களைக் கையாள்வதில் பழம் தின்று கொட்டை போட்டவராச்சே! அதனால் பிடி கொடுக்காமல் நழுவிவிட்டார். கட்சியின் அரசியல் குழுவுடன் கலந்தாலோசித்துவிட்டுப் பதில் சொல்வார் என்று கூறி அவர்கள் இருவரையும் அனுப்பி வைத்திருக்கிறார். திங்கட்கிழமை கட்சிக் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார். மகிந்த ராஜபக்சவின் விஜயராமாவில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு மற்றும் அதில் போட்டியிடுவதான ரணிலின் அறிவிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து திங்கட்கிழமை கூடிப் பேசுவது என்று பொது ஜன பெரமுன எனப்படும் மொட்டுக் கட்சியின் தலைவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். ஆலோசனைகளின் பின்னர் செவ்வாய்க்கிழமை முடிவை அறிவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. கட்சி உடையாமல் பாதுகாக்கும் வகையில் ரணிலை ஆதரிப்பதா அல்லது கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேராவை வேட்பாளராக நிறுத்துவதா அவர்கள் முன் உள்ள கேள்வி.

ரணிலை ஆதரிப்பதில் உள்ள இலாப நட்டங்கள் குறித்துக் கணக்குப் பார்ப்பதற்கு ராஜபக்சக்களுக்கு நிறையவே உண்டு. அதேநேரம் தம்மிக்கவைப் பொறுத்தவரையில் அவர் கடைசி வரையில் தமக்கு விசுவாசமாக இருப்பாரா, பதவியும் அதிகாரமும் கிடைத்தவுடன் அவற்றைக் கொண்டு தம்மையே வேரறுக்க முயற்சிக்கமாட்டாரா என்பதைப் பற்றியே அவர்கள் ஆராய வேண்டும். மொட்டுக் கட்சியின் திங்கட்கிழமைக் கூட்டம் இதனைச் -சுற்றியே இருக்கும். ரணிலைக் கையாள்வதில் உள்ள நெருக்கடிகள் காரணமாக தமது தரப்பிலிருந்து ஒருவரைக் களமிறக்குவதுதான் நல்லது என்று பஸில் மற்றும் நாமல் ராஜபக்சக்கள் நினைக்கிறார்கள். ஆனால், முதலுக்கு மோசம் வராத வகையிலும் ராஜபக்சக்கள் மீண்டும் அதிகாரத்தைப் பிடிப்பதற்கான அவகாசத்தைப் பெறும் வகையிலும் ரணிலைப் பதவியில் தொடர வைப்பதே சிறந்தது என்று மகிந்த ராஜபக்ச சிந்திக்கிறார். எனவே திங்கட்கிழமை கூட்டத்தில் எத்தகைய முடிவு வேண்டுமானாலும் எடுக்கப்படலாம்.

மொட்டுக் கட்சி ஒருவேளை தனியாக வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதாகத் தீர்மானித்தால் ரணில் விக்கிரமசிங்க கடைசி நேரத்தில் போட்டியிலிருந்து விலகிவிடுவார் பைடனை மாதிரி என்று நம்பும் அரசியல் பார்வையாளர்கள் அதிகம் பேருள்ளனர்.

இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கும் ரணில் விக்கிரமசிங்க முன்முயற்சிகளை எடுப்பார் என்கிற சந்தேகமும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது. தேர்தலில் வேறு யாராவது வென்று ஜனாதிபதியாகினாலும் கூட அவருடன் பணியாற்றுவதற்கு அமைச்சரவை ஒன்று இருக்காத வகையில் இந்த நகர்வை அவர் மேற்கொள்வார் என்றும் அவர்கள் கருதுகின்றனர். அப்படி நடந்தால் அதன் பின்னர் பொதுத் தேர்தல் ஒன்று நடந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படும்வரை ஜனாதிபதி அமைச்சரவை இன்றியே செயற்படும் நிலை ஏற்படும். இதனால் புதிய ஜனாதிபதி கடும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாம். ரணிலுக்கும் அதுதானே வேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுதான் பதவியை ஏற்றுக்கொண்டேன். உரம், எரிபொருள், எரிவாயு, பாடசாலை செல்லவும் வழியிருக்கவில்லை. நாட்டை ஏற்று இரு வருடங்களில் அந்த நிலையை மாற்றிக் காட்டினேன்.

நீண்ட நேரம் பேசுபவன் நான் அல்ல. ஒரு வேலையை ஏற்றுகொண்டால் அதனை செய்து முடிப்பேன். கஷ்டமான காலத்திலேயே நாட்டை ஏற்றேன். உணவு பெற்றுத்தந்தோம். உரத்தை பெற்றுத்தந்தோம், சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவாவிடம் உதவி கோரினேன். உலக வங்கியிடம் உதவி கோரினேன். ஜப்பானிடம் உதவி கோரினேன். இவ்வாறுதான் பயணத்தை முன்னெடுத்தேன்.

உதவியைப் பெற்றுக்கொண்டுதான் இன்றைய நிலைக்கு வந்துள்ளோம். வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளோம். அதற்காக கஷ்டமான தீர்மானங்களை எடுத்தேன். 6 மாதங்களில் இந்த நிலையை மாற்ற முடியும் என்று நம்பினேன். கடன் பெற முடியாத வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை குறைந்துள்ளது.

பல பிரச்சினைகள் இன்றும் உள்ளன. மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வங்கிகளில் நகைகளை அடகு வைக்கும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் பிரச்சினைகளுக்குப் படிப்படியாகத் தீர்வுகளை வழங்கி வருகிறோம். பொருளாதாரம் வலுவடையும் போது எமது கஷ்டங்களுக்கான தீர்வுகள் கிடைக்கும்.

அண்மையில் தங்க நகைகளுக்கான சலுகைகளை வழங்கியுள்ளோம். நாட்டு மக்களின் கஷ்டங்களைக் கண்டு கவலைப்படுகிறோம். அதனை நிவர்த்திக்கு எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். சமூர்த்திக்கு மாறாக 'அஸ்வெசும' திட்டத்தில் மூன்று மடங்கு அதிகமாக நிவாரணம் வழங்குகிறோம். பயனாளிகள் எண்ணிக்கையும் 24 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புலமைப்பரிசிலும் வழங்குகிறோம்.

எந்த அரசாங்கத்திலும் காணி உறுதிகள் உங்களுக்கு கிடைக்கவில்லை. முடிந்த வகையில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம். தோட்ட தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகள் கிராமங்களாக மாற்றப்படும். பொது மக்களுக்கு உரிமை வழங்குவதே எனது நோக்கமாகும். அதனை கைவிடப்போவதில்லை. உங்களை செல்வந்தர்க்காக்கும் வரையில் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

கிராமங்களில் வறுமையை போக்க விவசாய நவீனமயமாக்கலை செய்கிறோம். நாட்டில் தற்போது நிலைத்தன்மை காணப்படுவதால் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வர ஆரம்பித்துள்ளனர். வெள்ளையர்கள், ரஸ்யர்கள், இஸ்ரேலியர்கள், யுக்ரேனியர்கள் என பலரும் இலங்கைக்கு இன்று சுற்றுலா வந்துள்ளனர். அவர்கள் ஊடாக கிடைக்கும் வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும்.

இவற்றுக்காக நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துக்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியது அவசியம். கடன் வழங்கிய நாடுகளின் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டிய அவசியமும் உள்ளது. அவற்றை சிதைத்துவிட்டு செல்ல முடியாது. அவ்வாறு செய்ய முடியும் என்று கூறினால் அது பொய்யானது. அவர்கள் நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கின்றனர்.

அதனாலேயே எதிர்க்கட்சிகள் தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று கூறுகிறேன். எமக்கு இப்போது கிடைக்கும் நிதி கிடைக்காவிட்டால் மீண்டும் வரிசையில் நிற்கும் நிலை வரும். எனவே அரசியலுக்காக பொய்களைச் சொல்லி நாட்டை மீண்டும் வீழ்த்த வேண்டாமென கேட்டுக்கொள்கிறேன். நாடு சரிவடைந்த பின்னர் அதனை ஏற்றுக்கொள்ளாமல் ஓட்டம் பிடித்துவிடுவார்கள். ஒலிம்பிக் வீரர்களையும் மிஞ்சி ஓடுவார்கள்.

அதனால் மேற்சொன்ன ஒப்பந்தங்களை முன்னோக்கி கொண்டுச் செல்ல கடமைபட்டுள்ளோம். இன்று ரூபா வலுவடைந்துள்ளது. வட்டி வீதம் குறைகிறது. இந்த பயணத்தை தொடர்ந்தும் செல்வோம். எமக்கு மாற்றுத் தீர்வுகள் இல்லை. வேறு வழியிருந்தால் அதனையும் சொல்லுங்கள். பொய் சொல்லி காலம் கடத்தக்கூடாது. இப்போது உதவிகள் கிடைக்கின்றன. நாட்டை முன்னேற்ற வழி கிடைத்துள்ளது.

நாட்டு மக்களைப் போலவே இளையோரின் எதிர்காலம் பற்றியும் சிந்திக்க வேண்டும். இலட்சக் கணக்கில் இளையோர் நாட்டை விட்டுச் சென்றனர். அந்த நிலை மீண்டும் வரக்கூடாது. நாம் நல்லதொரு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். சிங்கப்பூர், டுபாய் போன்ற நாடுகளின் நிலையை நாம் காண்கிறோம். அவ்வாறு ஏன் எம்மால் வாழ முடியாது. பொய்களை சொல்லிக்கொண்டிருந்தால்தான் இருந்த நிலையில் இருக்கிறோம். 2048 பற்றி நான் பேசியபோது எதிர்கட்சியினர் ஏளனமாக சிரித்தார்கள். ஆனால் தற்போதுள்ள இளைஞர்கள் 2048 ஆம் ஆண்டிலேயே ஐம்பது வயதை அடைவார்கள் என்பது எதிர்கட்சியினருக்கு விளங்கவில்லை.

நாட்டுக்கு இன்னும் பல முதலீடுகளை கொண்டு வர வேண்டும். தொழிற்சாலைகளைக் கொண்டு வர வேண்டும். ஹோட்டல்களைக் கொண்டுவர வேண்டும். நாம் வலுவடைய வேண்டியது அவசியம். இன்று நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 85 பில்லியன் டொலர்களாக காணப்படுகிறது. இந்த தசாப்தத்தின் இடைப்பகுதியில் அதனை 350 பில்லியன் டொலர்கள் வரையில் அதிகரிக்க வேண்டும். அதனை நான்கு மடங்காக அதிகரிக்கும் இயலுமை எம்மிடம் உள்ளது.

சீனா, சிங்கப்பூர், வியட்நாம் போன்ற நாடுகளால் முடியும் என்றால் எம்மாலும் செய்ய முடியும். இளையோரின் எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டும். போராட்டங்களை செய்துக்கொண்டிருப்பதில் பயனில்லை. எதிர்காலத்தில் இளையோரே நாட்டை ஏற்கப் போகிறார்கள். அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி கேள்வியெழுப்ப அவர்களுக்கு உரிமை உள்ளது போலவே, அவர்களுக்கு பதிலளிக்க நாமும் கடமைப் பட்டிருக்கிறோம்.

அவ்வாறான பயணத்தை செல்லவே இன்று நான் சுயாதீன வேட்பாளராக களமிறங்கியிருக்கிறேன். பழைய அரசியல் முறையிலிருந்து நாம் விடுபட வேண்டும். நான் அமைச்சுக்களைப் பகிர்ந்தளித்தபோது அவர்களின் இயலுமையை அறிந்திருக்கவில்லை. ஆனால் திறமையாக செயற்படுவோர் இருக்கின்றனர் என்பது தெரிகிறது. அரசியலை பற்றி சிந்திக்காமல் நாம் செயலாற்றுகிறோம்.

அதனாலேயே நாட்டைக் கட்டியெழுப்ப முடிந்தது. புதிய முறையில் சிந்தித்து செயலாற்றினோம். நாட்டை நாம் பலப்படுத்த வேண்டும். எதிர்காலத்தைக் கட்டமைக்க வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுடன் செயலாற்றக்கூடாது. சஜித் பிரேமதாச, அனுரகுமார திசாநாயக்க போன்றவர்களின் நிலைப்பாடு என்ன? கட்சிகளை உடைப்பது எனது நோக்கமல்ல புதிய வகையில் சிந்தித்து அனைவரும் ஒன்றுபட்டுச் செல்ல வேண்டும் என்றே கூறுகிறேன்.

எமது இறுதி காலத்தில் அவற்றை செய்ய கடமைபட்டிருக்கிறோம். நான், மஹிந்த ராஜபக்ச, கரு ஜயசூரிய, சந்திரிகா, மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் அரசியலில் இறுதி கட்டத்தை நெருக்கியிருக்கிறோம். எனவே முரண்பாடுகளை விடுத்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். முரண்பாடுகளை வளர்த்ததால்தான் இந்த நிலை வந்தது. இனியாவது முன்னோக்கிச் செல்வோம்.

பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி புதிதாக சிந்திப்போம். 10 வருடங்களில் இந்த நாட்டை சிங்கப்பூரை போல கட்டியெழுப்ப முடியும். அதற்கான பயணத்தில் ஒன்றிணைந்து செல்வோம். நாட்டின் வெற்றியை உறுதி செய்வோம் என்றார்.

## மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் கொள்கை மத்திய நிலையத்தினை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றியபேதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மிகவும் முக்கியமானதாகும். அதிகார மாற்றம் நடைபெறும் தேர்தலாகும். கடந்த காலங்களில் அதிகாரங்கள் மாறியுள்ளன. ஆனால் வலது கையிலிருந்து இடது கைக்கும், இடது கையிலிருந்து வலது கைக்கும்தான் அதிகாரங்கள் மாறியுள்ளன. இதனால் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளும் குழுவினர் ஒன்றாகவே இருந்துவந்தனர்.

இம்முறை அவ்வாறு அல்ல. அதிகார மாற்றமானது மக்களிடத்தில் செல்லப்போகின்றது. அதற்கு தலைமை வழங்கப்போகும் நாம் அதிகார மாற்றம் அமைதியாகவும், நேர்மையாகவும் இடம்பெறுவதற்காக எமது பக்கத்தில் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளோம்.

குறிப்பாக, நீதியான, சுயாதீமான தேர்தல் இடம்பெறுவதற்காக அர்ப்பணிப்புடன் எமது ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளோம் என்றார்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர கட்சி இல்லை என்றும், வெளிநபர் என்றும் கூறுகின்றனர். விஜேதாச ராஜபக்சவை அவ்வாறு கூறுபவர்கள் சு.க. தோன்றியபோது இந்த உலகத்தில் பிறந்திருக்கவும் மாட்டார்கள். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டபோது, அவருக்கான நீதிமன்றத்தில் முன்னிலையான இளம் சட்டத்தரணியாக விஜேதாச ராஜபக்சவே காணப்பட்டார். கட்சித் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு ஒருமாதத்துக்கு முன்னரே அவர் சு.க. உறுப்புரிமையையும் பெற்றுள்ளார்.

சு.கவிலிருந்து ஆளும் தரப்பினருடன் இணைந்தவர்களுக்கு கட்சி தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பதற்கு உரிமை இல்லை. அவர்கள் எடுக்கும் எந்தவொரு தீர்மானமும் செல்லுபடியாகாது. ஜனாதிபதித் தேர்தலில் எனது முழுமையான ஆதரவு விஜேதாச ராஜபக்சவுக்கே.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் 8ஆம் திகதி கூட்டணி ஒப்பந்தத்தில் தயாசிறி ஜயசேகர கையெழுத்திடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. அன்றைய தினம் அவரது நடவடிக்கை என்ன என்பதை தெரிந்து கொள்ள முடியும் என்றார்.

## பொலிஸ் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்பில் விளக்கமளிக்கையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் நடத்தப்படும்போது அது தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டாலும், தேர்தலுக்கான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரையே அந்த அறிவித்தல் சென்றடையும். தற்போது அவ்வாறானதொரு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். எனவே அடிப்படை செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எவ்வித தடையும் ஏற்படாது.

தற்போது பொலிஸ் மா அதிபர் தன் கடமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாது என்பது ஆளும்தரப்பின் வாதமாக உள்ளது. ஆனால், தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அதற்கான அதிகாரியொருவரை நியமிக்க முடியும்.

அந்த நியமனத்தை பொலிஸ் ஆணைக்குழுவுக்கோ, அரச சேவை ஆணைக்குழுவுக்கோ வழங்கவேண்டும். அவ்வாறில்லை என்றால் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து தேவையேற்படின் தேர்தல் கடமைகளை செய்வதற்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியும். அவ்வாறில்லை என்றால் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக தேவையான ஆலோசனைகளை வழங்க முடியும்.

விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் பணிக்கமர்த்தப்பட்டால் மாத்திரமே சிக்கல் ஏற்படும். எவ்வாறிருப்பினும் செயலாளர்கள் ஊடாக பணிகளை முன்னெடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு முடியும். எனவே பொலிஸ் மா அதிபர் விவகாரம் தேர்தலுக்கு தடையாகாது.

இதனால் தடை ஏற்படும் என்று காண்பிக்க முயற்சிப்பவர்களும், நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று எண்ணுபவர்களும் மக்களின் உரிமையை முடக்கவே முயற்சிக்கின்றனர் என்றார்.

## உயர் நீதிமன்ற ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதியானரணில் விக்கிரமசிங்க தமது ரோயல் கல்லூரியின் சகாவான தினேஷ் குணவர்த்தன ஊடாக ஒழிந்திருந்து கொண்டு உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தினை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று கூறியுள்ளார்.

நான் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும், மக்களால் தெரிவுசெய்யப்படாத ஜனாதிபதிக்கும் சவாலொன்றை விடுகின்றேன். அவர்கள் நாடாளுமன்றில் அக்கருத்துக்களை கூறாது வெளியில் வந்து அக்கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறு கூறுகின்றபோது நீதிமன்றத்தினை அவமதித்தவர்களாக உயர்நீதிமன்றத்துக்கு பதிலளிக்க நேரிடும். ஆகவே எவரும் கடைசிவரையில் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவே இருக்க முடியாது. தொடர்ந்து ஆளும் தரப்பாகவும் இருக்க முடியாது. ஆனால் இம்முறை மக்கள் தமது ஆணையுடன் ஜனநாயக விழுமியங்களுக்கு உட்பட்டு மக்களாட்சிக்கான சரியான தீர்மானங்களை எடுத்து அறிவிக்கவுள்ளனர்.

அந்த அறிவிப்பு உயர்நீதிமன்றத் தீர்ப்பினை மீறியவர்களுக்கு, அரசமைப்பினை மீறியவர்களுக்கு தராதரமின்றி பதவியில் உள்ளவர்களுக்கு பதிலளிப்பதாக இருக்கும் என்றார்.

# நீதிமன்றத்தின் உத்தரவுகளை ஏற்க மறுக்கும் ஆளும் தரப்பு

## சட்டத்தரணிகள் ஒன்றிணைவு சீற்றம்



உயர்நீதிமன்றத்தின் உத்தரவை பிரதமரின் நாடாளுமன்ற உரையின் மூலம் வலுவற்றதாக்க முடியாது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் உத்தரவை பிரதமரின் நாடாளுமன்ற உரையின் மூலம் வலுவற்றதாக்க முடியாது என சட்டத்தரணிகள் அமைப்பான சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.

தேசபந்து தென்னக்கோனின் பதவி தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு தொடர்பிலும் அதன் பின்னர் ஜனாதிபதியும் அரசாங்கமும் நடந்துகொண்ட விதம் தொடர்பிலும் பொதுமக்களிற்கு தெளிவுபடுத்துவதற்காக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் சட்டத்தரணிகள் அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவுகளை வேண்டுமென்றே கடைப்பிடிக்க மறுக்கும் போக்கை அரசாங்கம் சமீபத்தில் பின்பற்றுவதை சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள் அமைப்பு இது அனைத்து அம்சங்களிலும் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையான விடயம் எனத் தெரிவித்துள்ளது.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகத் தொடர்ந்து பணிபுரிவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டால் அந்த பதவிக்கான அதிகாரங்களைப் பயன்படுத்த முயன்றால் அது நீதிமன்ற அவமதிப்பாகும் என ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு சபையின் தீர்மானத்திற்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு இல்லை என சிலர் தெரிவிப்பதை அவர் நிராகரித்துள்ளார்.

அரசமைப்புபேரவையின்செயற்பாடுகளைஉயர்நீதிமன்றம் சவாலிற்கு உட்படுத்த முடியாது என பிரதமர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளமை தவறான விடயம் என தெரிவித்துள்ள சட்டத்தரணி சாலியபீரிஸ், அரசமைப்பு சட்டத்தின் 41 ஜே பிரிவின்படி அரசமைப்பு சபையின் விவகாரங்களில் கூட உயர்நீதிமன்றம் தனது அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்தைப் பயன்படுத்துவதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளது என அவர்குறிப்பிட்டுள்ளார்.



கடந்த 22 வருடங்களாக உயர்நீதிமன்றம் இந்தப் பிரத்யேக நியாயாதிக்கத்தைப் பயன்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் தீர்மானங்களை அடிப்படை உரிமை மீறல் மனுவின் மூலம் சவாலிற்கு உட்படுத்த முடியும் எனத் தெரிவித்துள்ள சாலியபீரிஸ் பதில்பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு ஜனாதிபதி தவறினால்,அரசமைப்பின் ஏற்பாட்டின் படி ஜனாதிபதி பொருத்தமான நபருக்கு கடமைகள் பொறுப்புகளை வழங்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை வலுவற்றதாக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் . (05)

# மாவிட்டபுர திருக்குறள் வளாகம் திருப்பணி வேலைகள் மும்முரம்

யாழ்ப்பாணத்தில் திருக்குறள் வளாகம் அமைக்கும் திருப்பணி வேலைகள் மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன.

சிவபூமி அறக்கட்டனையால் மாவிட்டபுரத்தில் திருக்குறள் வளாகம் அமைக்கும் திருப்பணி கடந்த இரண்டு ஆண்டு காலமாக மாவிட்டபுரம் சந்தியில் வைத்திய கலாநிதி கமலாகரன் என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலத்தில் திருக்குறள் முழுவதையும் கருங்கல்லில் பதித்து திருக்குறள் தொடர்பான ஆய்வுகளை மாணவர்கள் செய்வதற்கு வசதியாக மாடிக்கட்டடம், நூல் நிலையம் இவற்றை உள்ளடக்கிய சிவபூமி யாழ்ப்பாணம் திருக்குறள் வளாகம் வேகமாக திருப்பணி வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த ஆண்டு இறுதியில் திருக்குறள் வளாகம் திறப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 1,330 குறளும் ஏற்கனவே கருங்கல்லில் பதிவு செய்யப்பட்டு இங்கு பொருத்துவதற்கு கோண்டாவில் சிவபூமியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் சென்னையில் எப்படி திருக்குறளுக்காக வள்ளுவக்கோட்டம் இருக்கின்றதோ அதேபோல் யாழ்ப்பாணத்திலும் திருக்குறள் வளாகம் அமைய இருப்பது ஒரு வரப்பிரசாதம் இந்த ஆண்டு இறுதியில் திறப்புவிழா காணவிருக்கிறது.(05)

# பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட சதுரங்கம் ஆரம்பம்



இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கம் வடமாகாணம் ஏற்பாட்டில் மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க போட்டி நேற்று (சனிக்கிழமை) காலை 8.30மணியளவில் கிளிஃபளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)மற்றும் கிளிஃபளை இந்து ஆரம்ப பாடசாலைகளில் ஆரம்பமாகியிருந்தது.

குறித்த போட்டியானது நேற்று(சனிக்கிஶ்ரீழமை)மற்றும் இன்று(ஞாயிற்றுக்கிஶ்ரீழமை)ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளதெனவும் அதன் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியில் வடமாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலை சதுரங்க விளையாட்டு வீர மாணவ மாணவிகள் கலந்துகொண்டிருந்தனர். இறுதி போட்டி இன்று இடம்பெற்று மாலை கிளிஃபளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யில் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (05-113)

# தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் மேலும் நீடித்துள்ளது

## இலங்கை வெளிவிவகார அமைச்சு தகவல்

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் மேலும் ஆறுமாதங்களிற்கு நீடித்துள்ளது என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய பேரவை பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுவதற்காக பட்டியலில் இணைக்கப்பட்ட அமைப்புகள் குறித்துமீளாய்வுசெய்துள்ளதுஎனத் தெரிவித்துள்ள இலங்கை வெளிவிவகாரஅமைச்சு,மேலும்ஆறுமாதங்களிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள்அமைப்புதடைசெய்யப்பட்டிருக்கும் எனத் தெரிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட அமைப்புகள் நபர்களின் நிதிகளை முடக்கலாம் எனத் தெரிவித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அந்த அமைப்புகள் தனிநபர்களிற்குநிதிவழங்குவதும் தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. (05)

# வீதியில் கண்டெடுத்த தொலைபேசியை விற்றவரும், வாங்கியவரும் கைதாகினர்

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

வீதியில்கண்டெடுத்தகைத்தொலைபேசியை76ஆயிரம்ரூபாய்க்கு விற்பனை செய்த நபரையும் , அதனை வாங்கியவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி பகுதியில் உத்தியோகஸ்தர் ஒருவர் தனது பெறுமதியான கைத்தொலைபேசியை கடந்த 14ஆம் திகதி தவறவிட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து , யாழ்ப்பாணபொலிஸ்நிலையத்தில்,தனது கைத்தொலைபேசி தவறவிடப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , தொலைபேசி தவறவிடப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ளவர்த்தகநிலையம்ஒன்றின் கண்காணிப்பு கமராக்களை பரிசோதித்தபோது, வீதியில்காணப்பட்டகைத்தொலைபேசியைஇளைஞன் ஒருவர் எடுத்து செல்வது பதிவாகிஇருந்தது. அதன்அடிப்படையில் இளைஞனை அடையாளம் கண்டு அவரை கைது செய்து, விசாரணைகளை முன்னெடுத்த வேளை,இளைஞன்,கைத்தொலைபேசியை முழங்காவில் பகுதியை சேர்ந்தஇளைஞனுக்கு76ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (05)

# வவுனியா வெடுக்குநாறி ஆலய பூசகரிடம் பயங்கரவாத புலனாய்வு பிரிவு விசாரணை

வவுனியா வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகரான மதிமுகராசாவை பயங்கரவாத புலனாய்வு பிரிவின் வவுனியா அலுவலகத்தினர் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவுக்கு வருமாறு கிராம சேவையாளர் ஊடாக விடுக்கப்பட்ட அழைப்பின்பிரகாரம் மதிமுகராசா பயங்கரவாத புலனாய்வுபிரிவின்வவுனியா அலுவலகத்திற்கு சென்று இருந்தார்.

அங்குகடும்விசாரணைகள் இடம் பெற்றதோடு வெடுக்குநாறி ஆலயம் தொடர்பான பல்வேறு விடயங்களும்அவரிடம்வினாவப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாட்டின் போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் பெரும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுநீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களில் ஆலய பூசகரும் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஊழல் ஒழிப்பு; பகிரங்க விவாதம் அவசியம் நடத்தப்படவேண்டும்

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மிக் முக்கிய காரணங்களில் ஒன்றாக அரசுக்குள் ஊடுருவியுள்ள ஊழல், மோசடி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமன்றி அரச அலுவலர்கள் மத்தியிலும் இந்த ஊழல், மோசடி புரையோடிப்போயுள்ளது. லஞ்சம் வாங்குவது, ஊழல் செய்வது என்பன அரச பணியிடங்களில் இயல்பானது என்று மக்களே நம்புகின்ற அளவிற்கு இது ஒரு பாரதூரமான பிரச்சினையாக நிலையூன்றியுள்ளது. இதனால்தான் பொருளாதார மீட்சிக்கான தனது உதவிக்கு ஒரு முக்கிய நிபந்தனையாக ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை பன்னாட்டு நாணய நிதியம் வலியுறுத்தியது.

ஆளும் தரப்பினருக்கு இது மிகக் கசப்பான விடயங்கள்தான். அவர்கள் ஊழல், மோசடி, லஞ்சம் என்பவற்று எதிராகப் பேசினாலும் தமது எதிர்கால அரசியல் மற்றும் கட்சி அரசியல் நலன்களுக்குத் தேவையான நிதியை இவற்றின் மூலமே திரட்டிக்கொள்கிறார்கள். அதனால் லஞ்சம், ஊழல், மோசடிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பது, அதனை தீவிரமாக நடைமுறைப்படுத்துவது என்பது நீருக்கு ஊடாக நெருப்பைக் கொண்டு செல்லும் பணிக்கு ஒப்பானது அவர்களுக்கு.

இந்த யதார்த்தம் காரணமாகத்தான் லஞ்சம், ஊழலுக்கு எதிரான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோதும் அது இன்னமும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை எனில் அடுத்தடுத்த கட்ட நிதியை அது விடுவிக்காது என்கிற நிர்ப்பந்தம் காரணமாக அவசர அவசரமாக சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் ஆளும் தரப்பு மிக மெத்தனமாகவே செயற்படுகின்றது. சட்டம் நிறைவேற்றப்பட்டுப் பல மாதங்கள் கடந்த நிலையிலே இப்போதுதான் அதை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்த அமைச்சரவைப் பத்திரம் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டு அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு நிலையில்தான், அரசுத் தலைவர் தேர்தலில் முதன்மை வேட்பாளர்களாக இருக்கக்கூடியவர்கள் என்று கருதப்படும் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகிய மூவரையும் ஊழல் ஒழிப்புத் தொடர்பான பகிரங்க விவாதத்திற்கு வருமான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்த அறிக்கையில் ”அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஊழலுக்கு எதிராக வினைத்திறனான சட்டம் ஒன்றினை நிறைவேற்றியதாக பெருமையாகச் சொல்கின்றார். அப்படியொரு சட்டம் நிறைவேற்றப்பட்டு நமது சட்டப் புத்தகங்களில் உள்ளது என்பது உண்மைதான். ஆனால் அது அங்கே மாத்திரமே காணப்படும்! கண்துடைப்பாக கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு சட்ட நடவடிக்கை எடுத்ததைத் தவிர, அறியப்பட்ட எந்தவொரு ஊழல் நடவடிக்கைகளுக்கும் எதிராக ஒரு வழக்கும் இன்னமும் தொடரப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் வைத்திருக்கும் அரசியல் கட்சியானது, நாட்டின் மிகப் பெரிய மோசடியாளர்களை உள்ளடக்கியதாக அறியப்படுகிறது. அதனால்தான் அவர்கள் மக்களால் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இன்னும் அவர்களில் யாரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அரசுத் தலைவர் விக்கிரமசிங்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அரசுத் தலைவர் பதவிக்கு அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஊழலுக்கு எதிராக ஒரு விரலைக் கூட உயர்த்துவார் என்பதை இதுவும் அவரது நீண்ட கால சாதனைகளும் நாட்டுக்கு தெரிவிக்க முடியாது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பழைய ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பகுதியானோரை அவரது கட்சிக்குள் கொண்டவர். அவர்களில் பலர் அனுபவமிக்க அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் ஊழலுக்கும் பெயர் பெற்றவர்கள். ஊழல்கள் தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் நலன்களுக்கு முரண்படாமல் ஒரு சுதந்திரமான அரசு வழக்கறிஞர் அலுவலகத்தை அமைப்பதாக அவர் உறுதியளித்திருந்தாலும், மக்கள் அவரது வாக்குறுதிகளை தீவிரமாக எடுத்துக் கொள்ள முடியுமா?

தேசிய மக்கள் சக்தித் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பல அரசியல்வாதிகளின் ஊழல் ஒப்பந்தங்கள் பற்றிய பல கோப்புகள் எனக் கூறப்பட்ட கோப்புக்களை அண்மைய காலங்களில் நாட்டுக்குக் காட்டினார். எனினும் அந்த கோப்புகள் என்ன என்பதை அவர் இன்றுவரை நாட்டுக்கு தெரிவிக்கவில்லை. அவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் ஊழல் ஒழிந்துவிடும் என்று நாடு நம்ப முடியுமா?

ஊழலை ஒழிப்பதாக அவர்கள் அளித்த வாக்குறுதிகளில் இந்த நபர்கள் தீவிரமாக இருந்தால், பொது வெளியில் இந்த பிரச்சினைகள் குறித்து கடுமையான கேள்விகளை எதிர்கொள்ள அவர்கள் தயாராக இருப்பார்களா? இதுபோன்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கவும், வாக்காளர்களை தெளிவுபடுத்தவும் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் பொது நிகழ்ச்சி ஒன்றினை நடத்த நாங்கள் தயாராக உள்ளோம். அத்தகைய மன்றத்தில் பங்கேற்க தங்கள் விருப்பத்தை பகிரங்கமாக அறிவிக்குமாறு போட்டியாளர்களை நாம் அழைத்து நிற்கின்றோம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வெளியாகி இரண்டு நாள்களாகியும்கூட அதற்கு எந்தவொரு அரசியல்வாதியிடமிருந்தும் பகிரங்கமாகப் பதில் கிடைக்கவில்லை. இதுதான் இலங்கையின் உண்மை முகம். அரசியல்வாதிகள் இதயசுத்தியோடு ஊழலை ஒழிக்க முன்வருபவர்களாக இருந்தால் அது குறித்து அவர்கள் மக்கள் முன்னால் பகிரங்கமாக உறுதியெடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கவேண்டும். அதற்குப் பகிரங்க விவாதத்திற்கு அவர்கள் வரவேண்டும். ஊழலை ஒழிக்காமல் இந்த நாட்டை மீட்கமுடியாது என்கிறபோது தலைவர்கள் தம்மை அதற்கு அர்ப்பணிப்பது இன்றியமையாதது. மக்கள் மீண்டும் மீண்டும் ஏமாறாத வகையில் முதன்மை வேட்பாளர்கள் அனைவரும் ஒரு பகிரங்க விவாதத்திற்கு ஒத்துக்கொள்வதே மிகச் சிறந்த தெரிவாக இருக்கமுடியும். எனவே அது கட்டாயம் நடத்தப்படவேண்டும்.




## ஒலிம்பிக்ஸ்: பாரிஸில் என்ன புதுமை?

206 நாடுகளின் பங்கேற்பு, 32 ஒலிம்பிக் விளையாட்டுகள், 22 பாராலிம்பிக் விளையாட்டுகள், ஒன்றரை கோடிக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள், 400 கோடி தொலைக்காட்சி ரசிகர்கள் என்று பாரிஸில் கோலாகலமாகத் தொடங்கி உள்ளது ஒலிம்பிக் போட்டி. இதற்கு முன் நிகழ்ந்த ஒலிம்பிக் போட்டிகளைவிட இம்முறை சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நடக்கின்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு அளிக்கப்படும் பதக்கங்களில் இம்முறை (பாரிஸ் நகரின் அடையாளமான) ஈபிள் கோபுரத்தின் ஒரு பகுதி இடம்பெறுகிறது. இந்தக் கோபுரம் 1889 இல் உருவானபோது வெளிப்பட்ட துகள்களில், மறுசுழற்சி செய்யப்பட்ட ஒரு பகுதி, அறுகோண வடிவில் செதுக்கப்பட்டு, ஒவ்வொரு பதக்கத்திலும் பொருத்தப்படுகிறது.

முதல் முறையாக மைதானத்தில் அல்லாமல், சீன் நதிக்கரையில் தொடக்க விழா கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இதன் காரணமாக, அதிகமானோர் இந்த விழாவைக் கண்டுகளிக்க முடிந்தது. இந்த விழாவுக்கான கலை இயக்குநராக தாமஸ் ஜாலி நியமிக்கப்பட்டிருந்தார். இவர் நடிகர், நாடக அமைப்பு ஒன்றை நிறுவியவர்.

சர்வதேச ஒலிம்பிக் குழு இம்முறை விளையாட்டு வீரர்களின் மனநலனை மனதில்கொண்டு சில செயல்களைச் செய்திருக்கிறது. மனதுக்கு அமைதி அளிக்கும் செயலி ஒன்றை விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கிறது. அதை அவர்கள் தரவிறக்கம் செய்துகொள்ளலாம். தவிர, அவர்கள் தங்கவைக்கப்படும் விளையாட்டுக் கிராமத்தில் தனியாக ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்குள் சென்று அமர்ந்தால் வெளியில் எழுப்பப்படும் எந்த ஆரவார ஒலியும் கேட்காது.

என்றபோதிலும் அந்நாட்டிலிருந்து 15,716 கி.மீ. தொலைவில் இருக்கிறது. கடலால் பிரிக்கப்பட்ட பகுதி. அங்குதான் வலுவான அலைகள் காணப்படுகின்றன என்பதால் ‘சர்ஃபிங்’ விளையாட்டுப் போட்டி அந்த இடத்தில் நடைபெறும். ஒலிம்பிக் நடக்கவிருக்கும் நகரிலிருந்து இவ்வளவு அதிகமான தொலைவில் ஓர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெறுவது என்பது இதுவே முதல் முறை.

பொதுவாக, ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு ஒரு தனி போஸ்டர், அதைத் தொடர்ந்து நடைபெறும் (மாற்றுத்திறனாளிகளுக்கான) பாராலிம்பிக்ஸ் விளையாட்டுகளுக்குத் தனி போஸ்டர் என்றுதான் உருவாக்கப்படும். இம்முறை இரண்டுக்குமாக ஒரு பொதுவான போஸ்டர் அழகான விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பிரேக்கிங் என்ற விளையாட்டுப் பிரிவு முதல் முறையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது நமக்கெல்லாம் பிரேக், டான்ஸ் என்ற விதத்தில்தான் பழக்கமானது (இடுப்பை வளைத்துக் கைகளை உலுக்கியபடி ஆடப்படும் ஆட்டம் என்பது அதன் பிம்பம்). 2018 இல் நடைபெற்ற இளைஞர்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகளில் இது இடம்பெற்று பெரும் வரவேற்பைப் பெற்றது. இதைத் தொடர்ந்து பதக்கங்களுக்கான போட்டி விளையாட்டாக இம்முறை அது தேர்வுசெய்யப்பட்டிருக்கிறது.

விளையாட்டின் மீது தீராத ஆர்வம் கொண்டவர்களின் பெருங்கனவு ஒலிம்பிக். பண்டைய கிரேக்கம் தந்த இந்த விளையாட்டுத் திருவிழாவை, நவீனக் காலத்தின் அடையாளமாக உருமாற்ற நினைத்தார் ஃபிரெஞ்சுக் கல்வியாளர் பியர் தெ கூபர்டின். உலகில் அதிகமானோரால் பார்க்கப்படுபவையாகக் கால்பந்து, டென்னிஸ், கிரிக்கெட் போட்டிகள் இருக்கலாம். ஆனால், இ0ந்தப்



சைவஉணவைவிரும்புபவர்களின்எண்ணிக்கை அதிகமாகிவருகிறது. சைவ உணவின் காரணமாகக் காற்றில் கலக்கும் கரியமில வாயுவின் அளவு குறைவே. இந்த ஒலிம்பிக்கில் அது பிரதிபலிக்கிறது (இவ்வளவுக்கும் ஐரோப்பிய நாடுகளிலேயே மிக அதிகமாக ஆட்டுக்கறியை உண்பவர்களின் எண்ணிக்கை ஃபிரான்ஸில்தான் அதிகம்!).

தாவரங்களை அடிப்படையாகக் கொண்ட பர்கர், வேர்க்கடலை, பீட்ரூட் ஆகியவை அடங்கிய ‘ஃபலாபெல்’ போன்ற சிற்றுண்டிகளைப் பாரிஸ் ஒலிம்பிக் பெருமளவில் வழங்கி வருகிறது. விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் உணவில் சைவ உணவின் விகிதம் அதிகமாக இருக்கும். ஒலிம்பிக் ஊழியர்கள், தன்னார்வலர்களுக்கான உணவகங்களில் பாதிக்குப் பாதி சைவ உணவு வழங்கப்படும்.

தஹிதிஎன்றபகுதிஃபிரான்ஸுக்குச்சொந்தமானது

போட்டிகளைவிட அதிகமாக எதிர்பார்க்கப்படுவது ஒலிம்பிக். காரணம், அதன் தனித்தன்மை.

விளையாட்டுப் போட்டிகளில் மனிதர்களின் நேரடிப் பங்கேற்பு, யோசனை, புதிய உத்தி அந்த விளையாட்டுக்குப் புதிய பரிமாணத்தை வழங்கலாம், சுவாரசியத்தைக் கூட்டலாம், பரபரப்பை அதிகரிக்கலாம். மனித உடல், ஆரோக்கியமான பொழுதுபோக்குத் திறன்களின் உச்ச வெளிப்பாடுதான் ஒலிம்பிக் போட்டிகள். அப்படி இருக்க வேண்டுமென்றுதான் கூபர்டின் உள்ளிட்ட முன்னோடிகள் அதை நிறுவியபோது எதிர்பார்த்தார்கள்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஒலிம்பிக் போட்டி தொடங்கிவிட்டது. 1900, 1924 ஆகிய ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் நடைபெற்றிருந்தாலும்கூட, 1936 பெர்லின்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# பிதுரு தோஷ சாபம் நீங்குவதற்கு அமாவாசை தர்ப்பணம் செய்க

## சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா தெரிவிப்பு



ஒகஸ்ட் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை தினம் ஆகும்.

ஆடி அமாவாசை தினங்களில் குறிப்பாக கொழும்பில் முகத்துவாரம் சங்கமத்திலும்வெள்ளவத்தைகடற்கரை பகுதியிலும்கீரிமலைமற்றும்கடற்கரை ஓரங்களிலும் ஆற்றோரங்களிலும் தர்ப்பணம் செய்வது மிகவும் சிறப்பானதாகும். அதேவேளை அந்தணர்களுக்குதானம்கொடுத்துபசு மாட்டுக்கும் அகத்திக்கீரை கொடுத்து சிவவழிபாடுமேற்கொண்டுசிவனுக்கு மோட்ச வழிபாடு மேற்கொள்வதும் சிறப்பானதாகும்.

தந்தை இழந்து ஒரு வருடம் முடித்தவர்கள் முன்னோர்களின் ஆன்மாவை நினைத்து தர்ப்பணம் செய்வது சிறப்பானதாகும்.

சூரியன் வட திசையில் இருந்து தென் திசை நோக்கி (தட்சினாயம்) செல்லும்பொழுது முதல் வரும் அமாவாசை ஆடி அமாவாசை ஆகும்.

சாஸ்திரத்தில் இறந்தவர்கள் இறந்த திதியில் தான் பூலோகத்திற்கு நம்மை தேடி வருவார்கள் என சொல்லப்பட்டுள்ளது. இங்குஅமாவாசை அன்று பூலோகம் சென்றடைவார்கள்.

ஆகவே, இந்த நாள்களை விட்டு அவர்கள் பூமிக்கு வராத நாட்களில் அவர்களுக்கு உணவளிப்பது எந்த ஒரு பயனும் இல்லை.

இந்த சாஸ்திரங்களை முறையாக கடைபிடிக்காமல் விடுவதனால்தான் பித்ருதோஷமும், பித்ருசாபமும் ஏற்படுகிறது.

பித்ருதோஷம், பித்ருசாபம்என்றால் இறந்தோர்கள் அவர்கள் நம்மை சபிப்பது கிடையாது. ஆனால்,

நமக்காக செய்யப்படும். காரியங்களை சரியாக செய்யவில்லையே, நமக்கானஉணவுகிடைக்கவில்லையே என இறந்தவர்களின் ஆத்மா

பெரு மூச்சுவிட்டால் கூட அது நம்முடைய பரம்பரையை தாக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இவ்வாறு இறந்தவர்களின் ஆத்மா எப்படி தன்னுடைய யாத்திரையை மேற்கொள்கிறது?

அந்த சந்தர்ப்பத்தில் இறந்தவர்களுக்கு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி கருடபுராணம் விளக்கமாக சொல்கிறது.

ஆனால் இந்த கருடபுராணத்தை வீட்டில் படிக்கக் கூடாது. இறப்பு ஏற்பட்ட வீட்டில் மட்டுமே படிக்க வேண்டும் என்பது ஐதீகம்.

இறந்தவர்களது ஆசியை முழுமையாகபெறவேண்டும்என்றால், தர்ப்பணத்தையும், திவசத்தையும்முறையாக செய்யப்படுவதே உத்தமம் ஆகும்.

இறந்தவர்களுக்கு ஒரு மாதம் என்பது ஒரு நாளாக கருதப்படுகிறது. அந்த ஒரு நாள் அவர்கள் மறைந்து போன திதி அல்லது அமாவாசை தினம் மட்டுமே அவர்கள் உணவை தேடி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நாள்களில் மட்டுமே திவசம், தர்பணம் செய்வது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்று ஆகும்.

எனவே ஆடி அமாவாசை பூஜை செய்து இறந்தவர்களுக்கு சிவனோடு கலந்து இன்பமாய் வாழ சிவனை பிரார்த்தனை செய்யுங்கள். (05)

# ஒலிம்பிக்ஸ்: பாரிஸில் என்ன புதுமை?

4ம் பக்க தொடர்ச்சி..........

ஒலிம்பிக் போட்டியைப் பிரம்மாண்டமாக நடத்தி, உலகுக்குத் தங்களைப் பற்றி வெளிச்சம் போட்டுக் காட்ட நினைத்தது, ஜெர்மனியை அப்போது ஆண்ட ஹிட்லரின் நாஸி கட்சி. அந்தப் போட்டிகள்தான் முதன்முதலில் தொலைக்காட்சியிலும் பரவலாக வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டன.



நாஸி கட்சிக் கொள்கைப்படி ஆரியர்கள்தான் அனைத்திலும் உச்சத்தில் இருக்கவேண்டும் என ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் எதிர்பார்த்தபோது, தன் விளையாட்டுத் திறமையால் அந்தக் கற்பிதத்தை உடைத்தார் ஆப்ரிக்க அமெரிக்கரான ஜெஸி ஓவன்ஸ். 100 மீ. ஓட்டம், 200 மீ. ஓட்டம், நீளம் தாண்டுதல், தொடர் ஓட்டம் ஆகிய நான்கிலும் தங்கப் பதக்கம் வென்று ஜெஸி ஓவன்ஸ் சாதித்தார்.

இவ்வளவுக்கும் நீளம் தாண்டுதல் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் பதற்றமாக இருந்த ஜெஸி ஓவன்ஸை நிதானப்படுத்தியவர் ஜெர்மானியரான லஸ் லாங். எப்படியாவது பதக்கத்தைத் தனதாக்கிக்கொள்ள வேண்டும் என்று எண்ணுவதைவிட, விளையாட்டு வெற்றி பெறவேண்டும் என நினைக்கும் லஸ் லாங் போன்ற ஆளுமைகள் பதக்கம் பெறாமலே மனங்களை வென்றுவிடுகிறார்கள்.

நவீனக் காலத்தில்... ஜெஸி ஓவன்ஸின் சாதனையைக் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு கழித்து, 1984 லாஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் கார்ல் லூயிஸ் சமன்செய்தார். 2008 பெய்ஜிங் ஒலிம்பிக்கில் ஜமைக்காவின் உசைன் போல்ட் 9.69 விநாடிகளில் 100 மீ. தொலைவை ஒரு சிவிங்கிப்புலியைப் போலச் சடாரெனக் கடந்தபோது, ஓடுதளங்கள் தீப்பிடிக்காத குறைதான். அதே ஒலிம்பிக்கில் 200 மீ. ஓட்டம், 400 மீ. தொடர் ஓட்டத்திலும் அவர் சாதனை படைத்தார் என்றால் சும்மாவா? கால்பந்து, டென்னிஸ் வீரர்/வீராங்கனைகளுக்கு இணையான புகழை ஒரே நாளில் அவர் அறுவடை செய்தார்.

பெண்களும் ஒலிம்பிக் தருணங்களுக்கு ஒளியேற்றியிருக்கிறார்கள். 1976 மாண்ட்ரியல் ஒலிம்பிக்கில் ருமேனியாவின் நாடியா காமென்சி ஜிம்னாஸ்டிக்ஸில் 10-க்கு 10 எடுத்தபோது, அன்றைக்கு இருந்த மின்னணுக் காட்சிப்பலகைகளால் அதைக் காட்ட முடியவில்லை.

காரணம் 9 வரைதான் அந்தப் பலகைகளில் இடம்பெறச் சாத்தியம் இருந்தது. 1988 சியோல் ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் ஃபிளாரன்ஸ் ஃகிரிபித் ஜாய்னர் 200 மீ. ஓட்டப் போட்டியிலும் அதற்கு முன்னதாக ஒலிம்பிக் தேர்வுக்கான 100 மீ. ஓட்டத்திலும் உலக சாதனை படைத்தார். இன்றுவரை அந்தச் சாதனைகள் முறியடிக்கப்படவில்லை.

2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளின் உயரம் தாண்டுதலில் கத்தாரின் மாதஸ் இஸ்ஸா பர்ஷிம், இத்தாலியின் ஜமர்கோ தம்பேரி இருவரும் ஒரே உயரத்தைத் தாண்டியிருந்தனர். கூடுதல் உயரத்தைத் தாண்டி ஒருவர் மட்டும் தங்கப் பதக்கத்தை வென்றிருக்க முடியும். ஆனால், அதற்கு மாறாகத் தங்கப் பதக்கத்தை இருவரும் பகிர்ந்துகொண்டு ஜஸ் லாங்-ஜெஸி ஓவன்ஸ் வெளிப்படுத்திய உயர்ந்த மனிதப் பண்பை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தினார்கள்.

இப்படி நம் காலத்துக்கென்று சிரிப்பு, அழுகை, உணர்வுவயப்படுதல், சோகம், கொண்டாட்டம் போன்ற பல்வேறு உணர்வுக் கலவைகளும் அசைபோட்டு மகிழ்வதற்கான தருணங்களும் தேவைப்படுகின்றன. சுருக்கமாக ஒத்திகையில்லாமல் ஒரு நாடகம் நடக்க வேண்டும். இதுபோன்ற சிலிர்ப்புணர்வை ஏற்படுத்தும் மாயாஜாலத் தருணங்கள் இந்த ஒலிம்பிக்கில் வாய்க்குமா?

நவீனத்துக்கும் புதுமைக்கும் வரலாற்றில் பெயர்பெற்ற பாரிஸில் நடைபெறும் இந்தப் போட்டி, அதற்கு உத்தரவாதம் அளிக்கும் என்றே தோன்றுகிறது. வழக்கத்துக்கு மாறாக இந்த ஒலிம்பிக்குக்கான தயாரிப்பு, ஏற்பாடுகளில் நிறைய மாற்றம் நிகழ்ந்துள்ளது ஒரு காரணம். மட்டுமல்லாமல், கோவிட் தொற்றுக்குப் பிறகு அச்சம் இல்லாமல் நடைபெறும் போட்டி என்பதாலும் மயிர்க்கூச்செறியும் ஒலிம்பிக் தருணங்களுக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போம்.





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1180/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpess Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் இறந்தபோன 7ஆம் ஆண்டு நிறைவு




(பாறுக் ஷிஹான்)

இன மத மொழி வேறுபாடுகளின்றி மக்கள் சேவையை முன்னெடுத்த மாமனிதர் மர்ஹூம் கலாநிதி ஏ.ஆர். மன்சூர் மறைந்து கடந்த வியாழக்கிழமை 07 ஆண்டுகள் பூர்த்தியாகியது.

கிழக்கு மாகாணத்தில் அனைத்து இன மக்களாலும் போற்றப்படும் அரசியல்வாதியாக விளங்கிய முன்னாள் அமைச்சரும்கல்முனைத்தொகுதியின்முன்னாள்எம்.பியுமான ஏ.ஆர்.மன்சூர் அவர்களின் 07 ஆவது நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் மரணமடைந்து 07 வருடங்கள் நிறைவினை தொடர்ந்து அவருக்காக வேண்டி கத்முல் குர்ஆன் நிகழ்வு மற்றும் விஷேட துஆப் பிரார்த்தனைகள் செவ்வாய்க்கிழமை இரவு ஶ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின்தேசிய ஒருங்கிணைப்புச்செயலாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் காசிம் வீதி கல்முனையில் அமைந்திருக்கும் இல்லத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராக, மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ காலத்தில் வர்த்தக வாணிப கப்பல்துறை அமைச்சராக, கிழக்கு மாகாண பாதுகாப்பு கவுன்ஸிலின் உயர்பீட அங்கத்தவராக, 2003ஆம் ஆண்டில் குவைத் நாட்டின் தூதுவராக பல பதவிகளை வகித்தவர் அவர்.

1933.05.30 இல் கல்முனைக்குடியில் எக்கீன் தம்பி ஆலிம் அப்துல் றஸாக் அவர்களுக்கும், முகம்மது அப்துல் காதர் சரீபா உம்மா அவர்களுக்கும் ஆறாவது பிள்ளையாக பிறந்த இவர் 1939-ல்1943 காலப்பகுதியில் கல்முனைக்குடி அல்-அஸ்ஹர்பாடசாலையில்ஆரம்பக்கல்வியைப் பெற்று 1943 ஆண்டு ஐந்தாமாண்டு புலமைப்பரிசில்பரீட்சையில்சித்தியடைந்தார். அதன் பின்னர் கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலையில் ஆங்கிலத்தை ஆர்வமாககற்றதன்காரணமாகமட்டக்களப்பு சிவானந்தா உயர்தரப் பாடசாலையில் இரண்டாம் நிலைக் கல்வியை கற்று உயர்கல்விக்காக கொழும்பு சென் ஜோசப் கல்லூரியில் சேர்ந்தார்.

பின்னர் 1955 ஆம் ஆண்டு இலங்கை சட்டக் கல்லூரியில் இணைந்து 1958 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற சட்டத்தரணியானார். கல்முனைத் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பரின் மூன்றாவது புதல்வியான ஸொஹறா காரியப்பரை திருமணம் செய்து கொண்டார்.

1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கல்முனை தொகுதியில் ஐ.தே. கட்சி அபேட்சகராக போட்டியிட்டு 5547 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகி,1979 இல் யாழ்ப்பாண மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரானார். 1989 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகவும், அதே வருடத்தில் வர்த்தக கப்பல்துறை அமைச்சராகவும், அதன் பின்னர் வர்த்தக கப்பற்துறை, வாணிபத்துறை அமைச்சராகவும் நியமனம் பெற்றார்.

17 வருடங்கள் தனது அரசியலை புனிதமாகவும், நேர்மையாகவும், களங்கமில்லாமலும் ஆற்றியவர் இவர். கல்முனை நவீனசந்தை. பொதுநூலகம், நீதிமன்றக் கட்டடத் தொகுதி,பிரதேச செயலகங்கள், கல்முனை செயலகக் கட்டடம், பாடசாலைகள், இஸ்லாமாபாத் குடியேற்றத் திட்டம், கல்முனை இலங்கை வங்கிக் கட்டடம், கல்முனை பொலிஸ் நிலையக் கட்டடம், மருதமுனை மக்கள் மண்டபம், மருதமுனை இரு பெரும் வீட்டுத் திட்டங்கள் உட்பட அன்னார் ஆற்றிய பணிகள் ஏராளம். அநேக இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தார்.1992 ஆம் ஆண்டு





அநேக தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்கள் இவரின் சிபாரிசிலேயே வழங்கப்பட்டன.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் 20.03.2016 இல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் இவரின் சேவையைப் பாராட்டி கலாநிதி பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அன்னார் இப்பிரதேச மக்கள் உள்ளத்தில் என்றும் வாழ்கின்றார். முதுபெரும் முஸ்லிம் அரசியல்வாதியும் முன்னாள் வர்த்தக வாணிப அமைச்சரும் சிரேஸ்ட இராஜதந்திரியும் சட்ட விற்பனருமான கலாநிதி ஏ.ஆர். மன்சூர் தனது 83 ஆவது வயதில் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் காலமானார். மூன்று பிள்ளைகளின் தந்தையான முன்னாள் அமைச்சர் ஏ.ஆர் மன்சூர் கல்முனையின் அபிவிருத்தி நாயகன் கரை படியா கரம் கொண்டவர் என மக்களால் அழைக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)



## சட்டத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்ற உத்தரவை சவாலுக்குட்படுத்துவது தவறான முன்னுதாரணமாகும். முழு உலகும் இலங்கையை பார்த்துக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியும் ஆளும்தரப்பும் சட்டத்தை மதித்து அதற்கமைய செயற்படவேண்டும். தனிநபர்களை அடிப்படையாகக் கொண்டு அல்லாமல், ஒரு முறைமையின் கீழ் செயற்படவேண்டும்.

நிறைவேற்றதிகாரம், சட்டத்துறை மற்றும் நாடாளுமன்றம் ஆகிய முத்துறைகளும் பலமாகவும் முரண்பாடுகள் இன்றியும் செயற்பட்டால் மாத்திரமே நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கமுடியும். ஜனநாயகத்தை பாதுகாக்கவேண்டுமெனில் நாட்டில் சட்டம் மதிக்கப்படவேண்டும். மாறாக அதனைச் சவாலுக்கு உட்படுத்தக் கூடாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எவரும் கட்டுப்பணம் செலுத்தலாம். அதற்கான உரிமை சகல இலங்கையர்களுக்கும் காணப்படுகிறது. ஆனால் மறுபுறம் தேர்தல் செலவுகள் குறித்தும் சிந்திக்க வேண்டும். செலவுகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு யோசனையொன்றையும் சமர்ப்பித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் முதலிரண்டு இடங்களைப் பெறுபவர்கள் தவிர ஏனைய அனைவரது கட்டுப்பணமும் அரசுடைமையாகியுள்ளது என்பதை அனைவரும் நினைவில்கொள்ளவேண்டும் என்றார்.

## அதாவுல்லா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உல்லா மற்றும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலி ஆகியோர் காலியில் நடைபெறும் பொதுக்கூட்ட மேடையில் இணைந்துகொண்டனர்.

இஷாக் ரஹ்மான் கடந்த பொதுத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கலாவெள தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதோடு ரிஷாத் பதியூதினுடன் இணைந்து செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இந்த பொதுக் கூட்டத்தில் ராஜபக்ஷக்களின் ஆதரவாளரான முன்னாள் பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிஹேயும் கலந்து கொண்டிருந்தார்.

## உயர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயர் நீதிமன்றத்தால் பணி இடைநிறுத்தப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் பணி நியமனம் செய்யப்பட்டபோது அரசமைப்பு பேரவை செயற்பட்ட விதம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டு, இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க போவதில்லை என்ற நிலைப்பாட்டில் ஆளும்தரப்புச் செயற்படுவதை பிரதமர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரை ஊடாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

நாடாளுமன்றத்தின் ஒரு பகுதியாகவே அரசமைப்பு பேரவை செயற்படுகிறது. ஆகவே நாடாளுமன்றத்தின் செயற்பாட்டை அல்லது தீர்மானத்தை நீதிமன்றங்கள் அல்லது சட்ட அதிகாரம் வழங்கப்பட்ட நிறுவனங்கள் சவாலுக்குட்படுத்த முடியாது என்ற தர்க்கத்தை ஆளும்தரப்பு முன்வைக்கிறது.

இதற்கமைய தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராக தொடர்ந்து செயற்படுவார் என்று ஆளும்தரப்புக் குறிப்பிடுகிறது.

அரசமைப்பு பேரவை நாடாளுமன்றத்தின் ஒரு பகுதியல்ல என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். நாடாளுமன்றத்தின் தெரிவுக்குழு மற்றும் குழுக்களை போன்று அரசமைப்பு பேரவை செயற்படுவதில்லை.

அரசமைப்பு ஊடாகவே அரசியலமைப்பு பேரவைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் நிறைவேற்றுத் துறையின் அங்கமாக அரசமைப்பு பேரவை செயற்படவேண்டும் என்றும் குறிப்பிடப்படுகிறது.

பொலிஸ்மா அதிபரான தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்ட விதத்தில் சிக்கல்கள் காணப்படுவதால்தான் அது தொடர்பில் விசாரணை செய்ய உயர்நிதிமன்றம் தீர்மானித்துள்ளது. இதற்காகவே பொலிஸ் மா அதிபருக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசமைப்புக்கு அமையவே பொலிஸ்மா அதிரபர் நியமிக்கப்பட்டார் என்று சபாநாயகர் வியாக்கியானம் வழங்கமுடியாது. உயர்நீதிமன்றமே வியாக்கியானம் வழங்கவேண்டும்.

பொலிஸ் மா அதிபருக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவால் ஜனாதிபதித் தேர்தலுக்கு பாதிப்பு ஏற்படும் என்று ஒருதரப்பினர் குறிப்பிடுகிறார்கள். பொலிஸ் மா அதிபருக்கு இடைக்காலத் தடையுத்தரவை விதித்த உயர் நீதிமன்றம் அரசமைப்பின் பிரகாரம் தகைமையானவரை பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபரை தேர்தல் காலத்தில் நியமிக்க முடியாது என்று ஆளும்தரப்பில் தரப்பில் குறிப்பிடப்படுகிறது. இடைக்கால ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க நாட்டை நிர்வகிக்கும்போது பதில் பொலிஸ்மா அதிபரை நியமித்து தேர்தல் பணிகளுக்கு ஏன் ஒத்துழைப்பை பெறமுடியாது? உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய ஆளும்தரப்புச் செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் என்றார்.

## வாக்களிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாதவர்கள் பிறிதொரு வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தெரிவத்தாட்சி அலுவலர், பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அல்லது அதற்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இந்த விண்ணப்பங்களில் உள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை என விண்ணப்பதாரர்களின் வசிப்பிடத்திற்கு அருகில் உள்ள கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து இலவசமாக பொற்றுக் கொள்ள முடியும் அல்லது www.election.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் - என்றுள்ளது.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலதரப்பட்ட போட்டியாளர்கள் போட்டியிடவுள்ளனர் என்று தெரிவித்தாலும் குறித்த ஒரு சிலருக்கிடையேதான் கடும் போட்டி நிலவும் என நினைக்கின்றேன்.

இதில் தற்போதைய ஜனாதிபதியே முதன்மையானவராக இருப்பார். குறிப்பாக ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு வாய்ப்பளிப்பதானது தமிழ் மக்கள் விரைவில் கடந்த காலங்களிலிருந்து விடுபட்டு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்க வாய்ப்பளிக்கும் ஒன்றாக இருக்கும் என நினைக்கின்றேன்..

2005 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்த பொழுது தமிழ் மக்களை சுயநலன்களுக்கு அப்பால் சிந்தித்து, அன்றே அவருக்கு அந்த வாய்ப்பை கொடுத்திருந்னனதால் இன்று தமிழ் மக்களின் வாழ்வியல் சிறப்பானதாக அமைந்திருக்கும். ஆனால் அன்று தவறவிட்டுவிடப்பட்டுவிட்து

ஏனென்றால் தமிழ் மக்களது வாக்குகள் ஊடாகத்தான் ஜனாதிபதி ஒருவர் வெல்லக்கூடிய வாய்ப்பு 2005 இருந்தது. அன்று அந்த வாய்ப்பை ரணில் விக்ரமசிங்கவுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் இந்த பாழாப்போன யுத்தமோ அல்லது இத்தனை துன்பங்களை துயரங்களை இடம்பெருவுகளை எமது மக்கள் சந்தித்து இருக்க மாட்டார்கள் .

அதேநேரம் எமது மக்களுக்கு தற்போதும் ஜனாதிபதி தேர்தல் என்ற வாய்ப்பு கிடைக்கவுள்ளது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி நாங்கள் இன்றைய ஜனாதிபதியுடன் சேர்ந்து பயணிப்பதன் ஊடாக நாடும் எங்களுடைய மக்களும் அதிக பயன்களை பெறலாம் என நான் நம்புகின்றேன்.

ஆனால் கடந்த இரண்டு வருடதுக்குள் ஜனாதிபதி தன்னுடைய ஆற்றலால் தன்னுடைய செயல்பாட்டால் நாட்டுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கிதந்திருக்கின்றர். அதனால் அவருக்கு நாங்கள் இன்னும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கவேண்டும் என்று விருப்புகின்றேன்.

அந்த வகையில் எதிர்வரும் காலங்களிலும் அந்த சந்தர்ப்பத்தை ரணில் விக்ரமசிங்கவுக்கு கொடுப்பதன் ஊடாகவும் அவரோடு சேர்ந்து பயணிப்பதன் ஊடாகவும் எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளில் இருந்து வெளியில் வரலாம் என்று நினைக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

## தமிழ் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார் கள். அவ்வாறு அழைக்கப்பட்டபோது ஏழு மாககாண முதலமைச்சர்கள் பிரசன்னமாகியிருந்தார்கள். ஆனால் வடக்கு மாகாண சபை முதலமைச்சரும், கிழக்கு மாகாண சபை முதலமைச்சரும் அங்கு வருகை தந்திருக்கவில்லை.

யார் அதிகாரப் பகிர்வினை கோரினோமோ அந்த தரப்பினரின் முதலமைச்சர்கள்தான் வருகை தரவில்லை. வருகை தந்த ஏனைய ஏழு மாகாண சபைகளின் முதலஷ்மைச்சர்களும் பொலிஸ், காணி அதிகாரங்களைக்கூடக் கோரினார்கள். ஆனால் அதனை வலியுறத்த வேண்டியவர்கள் வருகை தரவே இல்லை.

மாறாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் மாகாண சபை இயங்காமலிருந்ததற்கு பொறுப்புக்கூறுவதற்கு பதிலாக ஏனையவர்கள் மீது பழிகூறி பலிக்கடாவாக்கினார்.

அரசியல்காரணங்களுக்காகவே குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தத் தருணத்தில் நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சியும் பேசாமடந்தையாக இருந்தது. எனது கட்சியைப் பற்றி இவ்வாறு நான் கூறுகின்றபோது வருகின்ற விளைவையும் நான் அறிவேன்.

அவ்விதமான தரப்பினரால் தற்போதும் தமிழர்களை பின்னடையச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுகின்றன. பொதுவேட்பாளர் என்ற போர்வையிலே முன்னெடுக்கப்படுகின்றது. பல தசாப்தங்களாக எமது மக்களின் அபிலாஷைகள் என்று வெளிப்படுத்திய விடயங்களை நலிவடையச் செய்வதற்கான முயற்சிகள் அவர்களால் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பொலிஸ் தலைமையகத்தில் தேர்தல் விவகாரங்களுக்காக விசேட பிரிவொன்று நிறுவப்பட்டுள்ள நிலையில் நேற்றைய தினம் குறித்த பிரிவுக்குப் பொறுப்பதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளர் என்பது குறிப்பிடத்தக்கது.








## வனத்துறை காரியாலய அதிகாரிகள் மீது தாக்கு

### சந்தேகநபர் கைது



பூநகரி வனத்துறை காரியாலய அதிகாரிகள் இருவரை அப்பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் மரக்கட்டையால் தாக்கியதால் காயமடைந்த இருவர் பூநகரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பூநகரி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பூநகரி பிரதேசத்தில் காடுகளை வெட்டியமை தொடர்பாக சில மாதங்களுக்கு முன் கைதுசெய்யப்பட்ட ஒருவர் மது அருந்திவிட்டு வன காரியாலயத்தின் ஜன்னல்களை உடைத்து அரச உடைமைகளுக்கு சேதம் விளைவித்ததாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன்படி தாக்கிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் காயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

## அஸ்கிரிய மகாநாயக்கரிடம் ஆசி பெற்ற கிழக்கு ஆளுநர்



(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக் கப்பட்டுள்ள நிலையில், சியாம் நிகாயாவின் அஸ்கிரிய பிரிவின் வணக்கத்திற்குரிய வரகாகொட ஸ்ரீஞானரத்ன மகாநாயக்க தேர ரிடம் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்



தலைவருமான செந்தில் தொண்டமான் ஆசி பெற்றார்.

மேலும், கிழக்குமாகாணத்தில் அனைத்து சமூகங்களுக்கிடையில் நிலவும் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் பற்றியும் சகல சமூகங்களுக்கிடையிலும் சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்த எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் வணக்கத்துக் குரிய தேரருக்கு விளக்க மளித்தார்.

அத்துடன், பெருந்தோட்டப் பகுதிகளில் நிலவும் சம்பளப் பிரச்சினைகள் மற்றும் தற்போதைய பிரச்சினைகள் குறித்து மகாநாயக்க தேரருக்கு விளக்கமளித்தார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் அஸ்கிரிய பீடத்திற்கும் இடையிலான நீண்டகால உறவை வணக்கத்துக்குரிய மகாநாயக்க தேரர் இதன் போது நினைவு கூர்ந்தார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# கனகாம்பிகை குளம் ஆக்கிரமிப்பு: பொது அமைப்புக்கள் முறைப்பாடு


கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கனகாம்பிகைகுளத்தில் ஓர் ஏக்கர் பரப்பளவு அளவில் தனிநபர் ஒருவரால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என பிரதேச கமக்கார அமைப்பு உள்ளிட்ட பொது அமைப்புக்கள் நீர்ப்பாசன பொறியியலாளர் உள்ளிOடட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். இருந்தும் குறித்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை நிறுத்தப்படவில்லை என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கனகாம்பிகைகுளத்தின் ஏ9 வீதியோடு உள்ள பகுதி மண் நிரப்பட்டு அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ளது.10 கொள்ளலளவு கொண்ட இக் குளத்தினை நம்பி சுமார் 300 வரையான சிறுதானிய பயிர்ச் செய்கையாளர்கள் உள்ளனர்.எனவே இவ்வாறு குளம் ஆக்கிரமிக்கப்படுவதான நிலைமையானது எதிர்காலத்தில் இக்குளத்தினை நம்பியுள்ள விவசாயிக்களுக்குபெரும்பாதிப்பினைஏற்படுத்திவிடும். எற்கனவே இக்குளத்திற்குச் சொந்தனமான முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 20 ஏக்கர் வரையான நிலம் பொது மக்களால் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்டுள்ளது. இதன்போது குறித்த விடயம் தொடர்பில் அதிகாரிகளின் கவனத்திற்குச் கொண்டு சென்றும்எவ்விதநடவடிக்கையும்எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக குளத்தின் பல பகுதிகள் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனத் தெரிவித்துள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள். தற்போது இடம்பெற்றுள்ள குளத்தின் முக்கிய பகுதி ஆக்கிரமிப்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனால் உடனடியாக அதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி கிழக்கு பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி கை.பிரகாஸ் அவர்கள் கரைச்சி பிரதேச செயலாளர் மற்றும் பொலீஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு குறித்த குளத்தின் ஆக்கிரமிப்பை தடுOத்து நிறுத்துமாறு கடிதங்களை எழுதியுள்ளார். எனவே இவ்விடயம் தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம்.ஜெகூ அவர்களை தொடர்பு கொண்டு வினவிய போது குறித்த விடயம் தொடர்பில் தனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத் திற்கு கொண்டுசென்றுள்ளதாகவும் தெரிவித் தார். (05)

# சிறுபான்மைக் கட்சித் தலைவர்களை சந்தித்த இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான்









(ஹஸ்பர் ஏ.எச்)

சிறுபான்மை கட்சி தலைவர்களை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடலில் மேற்கொண்டார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா,அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிஷாத் பதியுதீன், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான



எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன், எஸ்.சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)

# கிளி. திருவையாறு மகா வித்தியில் பொன் விழா ஏற்பாடு மும்முரம்





பொன்விழாவை முன்னிட்டு பாடசாலை சமுகத்தால் ஆரோக்கியத்தை பேணுவோம் என்ற தொனிப்பொருளில் நடைபயணம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (சனிக்கிழமை) காலை பாடசாலையிலிருந்து ஆரம்பமாகிய நடைபயணம் திருவையாறு பகுதியை வலம் வந்து பாடசாலையில் நிறைவடைந்தது.

மேற்படி நடைபயணத்தில்பாடசாலையின் முன்னைநாள் அதிபர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (05-113)

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புத்தசாசன மத மற்றும் கலாசார விவகாரங்கள்அமைச்சின்சாய்ந்தமருது கலாசாரமத்தியநிலையம்ஏற்பாடுசெய்து நடத்திய வருடாந்த பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப் பாளருமான ஏ. பீர்முகமது, சட்டமுது மாணி, சட்டத்தரணி சஹ்பி எச். இஸ்மாயில் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் ரீ.எம்.ரின்சான், பிரதேசசெயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.ரம்ஸான், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளீர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எச். சபீகா, ஏ.எம். தௌபீக், அக்கரைப்பற்று கலாசாரமத்தியநிலையப்பொறுப்பதிகாரி ஐ.எல். ரிஸ்வான், பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.சீ.முஹம்மத், பிரதேச செயலக நிதி உதவியாளர் ஏ.சீ.றியாஸ், கலாசார மத்தியநிலையநிறைவேற்றுக்குழுகுழு உறுப்பினர்களானஓய்வுபெற்றகலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஷ்ரப், ஆசிரியர் எம்.ஐ. எம். அமீர், மூத்த கலைஞர் எம். ஐ. அலாவுதீன் மற்றும் மத்திய நிலையத்தின் ஊடக ஒருங் கிணைப்பாளர் ஊடகவியலாளரும் பல்துறைக்கலைஞருமானஎம்.எஸ்.எம். ஸாகிர், மத்திய நிலைய அபிவிருத்தி சங்க செயலாளர் அஸ்வான் மௌலானா, பொருளாளர் ஏ.பி. நௌசாத் உட்பட கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் மத்திய நிலைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களின் ஹஸீதா மற்றும் சிறுமிகளின் பரத நாட்டியம் உட்படபல்வேறுகலாசாரநிகழ்ச்சிகளும் மேடையில் அரங்கேற்றப்பட்டதோடு, கடந்த வருடம் கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, பாராட்டு கௌரவம், நினைவுச் சின்னம் வழங்கும் வைபவங்களும் இடம்பெற்றன.



இதன் போது சுமார் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ்களைப்பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில், முக்கிய அம்சமாக சாய்ந்தமருதில் பிரதேச செயலாளராக இருந்து ஊரின் நலன் கருதி, தன்னலம் பாராது சேவையாற்றி அரும் பணியாற்றிவரும் சேவைச் செம்மல் பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக், மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே. எம். றிம்ஸானால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் இறக்காமம் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் சென்ற ஏ.பி. நௌசாத் மற்றும் மத்திய நிலையத்தின்செயலாளராக இருதடவைகள் கடமையாற்றிய கலைஞர் அஸ்வான் மௌலானா ஆகியோர் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.



மிகக் குறுகிய காலத்தில் சாய்ந்தமருதில் கலாசார மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டாலும் அதில் ஆங்கிலம், சிங்களம் மற்றும் சித்திரம், நடனம் போன்ற பாரம்பரிய கலாசார பாட நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டு, அதில் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் நன்மையடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# ரணில், டக்ளஸ், கூட்டமைப்பு ஏமாற்றுப் பேர்வழிகள் ஆவர்

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு



(பாறுக் ஷிஹான்)

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகடைக்காயாக பயன்படுத்தி விட்டு ஏமாற்றினார், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஆகியோரும் கறிவேப்பிலைகளாக பயன்படுத்தி விட்டு கைவிட்டனர் என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் வருத்தம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் உள்ள அலுவலகத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தேர்தல்களில் யாரை ஆதரிப்பது? என்பது கேள்விக்குறியாக நீடிக்கின்றது. ஏனென்றால் எமது நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இன்னமும் பேரம் பேசும் சக்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொழிற்சங்கங்களுக்கு கிடைப்பதாக இல்லை.

வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல் தலைமைகள் தேர்தல் வெற்றிகளுக்காக மாத்திரம் எம்மை பயன்படுத்தி விட்டு நட்டாற்றில் கை விட்டு சென்றிருக்கின்றனர் என்பதே வரலாறு. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். மலையகத்தின் உழைக்கும் தோட்ட தொழிலாளர் வர்க்கம் பாரிய அரசியல் சக்தியாக மாறி அவர்களின் உரிமைகளை வென்றெடுத்துள்ளது. எனவே வடக்கு, கிழக்கை சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஏன் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது? நாம் பேரம் பேசும் சக்தியாக எழுச்சி பெற வேண்டும்.

அரசாங்க அதிபர் தொடக்கம் அலுவலக பணியாளர்கள் வரை அரசாங்க ஊழியர்கள்தான். மலையகத்தில் ஏற்பட்ட பேரெழுச்சி எமது அரசாங்க ஊழியர்கள் மத்தியிலும் ஏற்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரை மிக மூத்த தொழிற்சங்கம் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம்தான். நல்லாட்சியை ஏற்படுத்த நாம் ரணில் விக்கிரமசிங்கவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டோம். அப்போது அவரை வடக்கு, கிழக்கில் ஆதரித்த ஒரேயொரு தொழிற்சங்கம் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம்தான். ஆனால் அவர் எம்மை ஏமாற்றினார்.

அதே போல எமது ஒத்துழைப்பை பெற்ற டக்ளஸ், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஆகியோரும் நம்ப வைத்து கழுத்தறுத்தனர். நாங்கள் பாதிக்கப்பட்டோம். ஆனால் நாம் யாருக்கும் அடிமைகள் அல்லர். யாருக்கும் அடி பணிய மாட்டோம். எமது நோக்கம் ஸ்ரீலங்கா அரச சேவையாளர்கள் சம்மேளனத்தை புனரமைத்து அதன் மூலம் வடக்கு, கிழக்கில் மாபெரும் சக்தியாக எதிர்காலத்தில் பிரவாகம் எடுப்பதாகும். - என்றார். (05)

# சக்கர நாற்காலி கிரிக்கெட் கழகம் கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்




வடக்கு கிழக்கு மாகாண சக்கர நாற்காலி கிரிக்கெட் கழகத்தினர் நேற்று (சனிக்கிழமை) கிளிநொச்சியில் ஊடக சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த சக்கர நாற்காலியில் துடுப்பாட்டம் விளையாடக்கூடியவர்களை உள்வாங்கி குறித்த கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக தெளிவூட்டும் ஊடக சந்திப்பு கிளிநொச்சியில் நடைபெற்றது. குறித்த துடுப்பாட்ட அணியின் தலைவர் ஆ.முகமட் அலி கருத்து தெரிவித்தார். தேசிய ரீதியில் சென்று விளையாடிய வடமாகாண வீரர்களுடன் ஏனைய வீரர்களை உள்வாங்கி தேசிய ரீதியில் சாதிப்பதே தமது நோக்கம் எனவும் தமது விளையாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான வளங்கள் பெரும் சவாலாக இருப்பதாகவும் குறிப்பாக துடுப்பாட்டத்திற்குரிய சக்கரநாற்காலி கூட இல்லை எனவும் புலம்பெயர்ந்த உறவுகள் தமக்கு உதவ வேண்டும் என தெரிவித்தனர்.(05-113)

# நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பயணித்த வாகனம் நேற்று விபத்து

## கிளிநொச்சியில் சம்பவம்




நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பயணித்த வாகனம் கிளிநொச்சியில் விபத்துக்குள்ளானது.

நேற்று (சனிக்கிழமை) பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி ஏ - 9 வீதி 155 ஆம் கட்டை பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் சொகுசு வாகனம் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்துக்கும் மோட்டார் சைக்கிளுக்கும் சிறியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. எனினும், எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.(05)

# வரிப்பத்தான்சேனை பள்ளியின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு




முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸின் முயற்சியின் பயனாக ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் வரிப்பத்தான்சேனை



ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் கட்டிட மேல்தள வேலைகளுக்காக 05 மில்லியன் ரூபா நிதியில் புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வரிப்பத்தான்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர், ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.உதுமாலெப்பையின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிதி ஒதுக்கீட்டு ஆவணத்தை நம்பிக்கையாளர் சபையினரிடம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.ஐ.நைசர், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் எம்.எம். ஆசிக், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாவா, வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், சிரேஷ்ட ஆலோசகர் எம்.ஏ. கலீல் ரஹ்மான், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளர் ஏ.ஆர்.ஏ.அலியார் உட்பட உறுப்பினர்கள், ஜமாஅத்தினர், ஊர் மக்கள், கல்விமான்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(05)

# நுவரெலியாவில் ஐவர் கைது

## அனுமதியின்றி மாணிக்கக் கல் அகழ்ந்தனராம்

நுவரெலியா, நோர்வுட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வுப் பணியில் ஈடுபட்ட ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என நோர்வுட் பொலிஸார் தெரிவித்தனர்.

நோர்வுட் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை மற்றும் நோர்வூட் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 20 முதல் 40 வயதுக் குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மாணிக்கக் கல் அகழ்வுப்பணிக்குப்பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைநோர்வுட்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# விக்கிரமபாகு கருணாரட்ணவுக்கு யாழ். பல்கலையில் நினைவேந்தல்

தமிழ் மக்களின் தன்னாட்சியுரிமையை அங்கீகரித்து தொடர்ந்து குரல் கொடுத்த சிங்களத் தலைவர் கலாநிதி. விக்கிரமபாகு கருணாரட்ண அவர்களது மறைவையொட்டி பல்கலைக்கழக மாணவர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, கறுப்பு யூலை இனவழிப்புக் கலவரத்தின் 41 ஆம் ஆண்டு நினைவேந்தல்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (05)

# மறைந்த நடிகர் தர்ஷன் தர்மராஜின் பெயர் இறக்குவானையில் வீதிக்கு




இலங்கை வரலாற்றில் சினிமாத்துறையில் ஈடுபட்டு இரத்தினபுரி மாவட்டத்தின் இறக்குவானை பகுதிக்கு சாதனை பெற்றுத்தந்து, தனது நாமத்தை நிலைநிறுத்தி மறைந்த நடிகர் தர்ஷன் தர்மராஜ் நினைவாக இறக்குவானை பிரதேசத்தில் உள்ள வீதியொன்றுக்கு 'தர்ஷன் தர்மராஜ் ஒழுங்கை' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த வீதிக்கான பெயர்ப்பலகை நேற்று (சனிக்கிழமை) காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.





திறப்பு விழாவுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் இணைப்பு செயலாளருமான எஸ். ஆனந்தகுமார் கலந்துகொண்டிருந்தார்.

மேலும், கொடக்கெவல பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பிரியந்த பண்டார, இருக்குவானை பரியோவான் தேசிய பாடசாலையின் அதிபர், மத தலைவர்கள், தர்ஷன் தர்மராஜின் குடும்பத்தவர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (05)

# மோ.சைக்கிள் மோதி பாதசாரி உயிரிழப்பு

மொரகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கணேவல்பொல - தாச்சிஹல்மில்லேவ பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் மோதி பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மொரகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கணேவல்பொலவிலிருந்து கலென்பிந்துனுவெள நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிள் செலுத்துனரும் பாதசாரியும் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பாதசாரி உயிரிழந்துள்ளதாக பொலிஸார்தெரிவித்தனர். முரியாகடவல பகுதியில் வசிக்கும் 63 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரகொட பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றனர்.(05)

# கொஸ்கமவில் மருமகனால் தாக்கப்பட்டு மாமன் கொலை

கொஸ்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களுஅக்கல பகுதியில் மருமகனால் தாக்கப்பட்டு மாமனார் கொலைசெய்யப்பட்டுள்ளதாககொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

களுஅக்கல பகுதியில் வசிக்கும் 75 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.


இவர் தனது மகளுக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டைச் சமரசம் செய்யச் சென்ற போது மருகனால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவரது சடலம் அவிசாவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபரான கொலை செய்யப்பட்டவரது மருமகன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இவ்வருடத்தில் இதுவரை 32,078 டெங்கு நோயாளர்கள்



இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 32,078 டெங்கு நோயாளர்கள் அடையாளம்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

இந்நிலையில் கொழும்பு மாவட் டத்தில் 7,551 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 12 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும், இதனால் பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (05)

# கொழும்பு - காலி வீதியில் விபத்து; இளைஞன் சாவு

பயாகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொழும்பு - காலி பிரதான வீதியில் தளுவத்த பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பயாகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

அளுத்கமையிலிருந்து களுத்துறை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று அதே திசையில் பயணித்த பஸ் ஒன்றை முன்னோக்கிச் செல்ல முயன்ற போது லொறி ஒன்னுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை மக்கொணை பகுதியில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞரொருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, பஸ் சாரதியும் லொறி சாரதியும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பயாகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட் JRIDE

## TAXI APP FROM JAFFNA

இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play

Download on the App Store

வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே! உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play

Download on the App Store

## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 706563213 / 703563213

## JRIDE TAXI APP
## SPEED IT NET

பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213

www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.07.2024இல் வெளியிடப்பெற்றது